அ: தம்பி நிதனோடு தங்கை யாழினி எங்கள்
சாதுரியன் பெயரை சொல்லி பாடு நீ 2

குழு: பொங்கி கரம் புலிகளாகி வெடிகளானவர் இவர்
பெரிய நெருப்பாகி எரிந்து போனவர்

குழு: தம்பி நிதனோடு

அ: வன்னி மண்ணை சிறை பிடிக்க எண்ணி வந்த பகைவனுக்கு
வாசலிலே விழுந்ததடா முதலடி 2

குழு: தலைவன் சொன்னபடி கரும்புலிகள் மின்னலென பாய்ந்து
ஜெயசிக்குறுவிற்கு கொடுத்ததடி பதிலடி

குழு: தம்பி நிதனோடு

ஆ: செந்தமிழர் வீதியிலே வந்து நின்ற எதிரிகளை
தேடித் தேடி அடி கொடுத்தார் யாழினி 2

குழு: எங்கள் தம்பி நிதனோடு பொங்கி சிங்களத்து
படைகளுக்கு சாதுரியன் இடி கொடுத்தான் பாடு நீ

குழு: தம்பி நிதனோடு

அ: கரிய வேங்கை வெடி சுமந்து எரியும் வரை பகைவனது
கால்கள் இந்த மண்ணில் பட மாட்டுதே 2

குழு: இங்கு விரியும் சிறு மலர்கள் கூட கரிய புலியாகினின்று
விடுதலைக்கு ஒளி கொடுத்து காட்டுதே

குழு: தம்பி நிதனோடு